## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2014

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்கள்**

புத்தகப் பெறுமதி பூச்சியமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 54,793,397 பெறுமதியான 04 நிலையான சொத்து விடயங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியை புத்தகங்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச மானியங்களைக் கணக்கு வைத்தல் மற்றம் அரச மானியங்கள் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சொத்துக்களை காலக்கழிவு செய்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை பல்கலைக்கழகத்தினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் அரசின் மானியங்களின் அளவு ரூபா 2,568,722,000 தொகையாக இருந்ததுடன், அது பிரதிநிதித்துவப்படுத்திய நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 1,156,324,406 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியிலிருந்து வயம்ப பல்கலைக்கழகத்திற்காக கிடைத்த மொத்த மூலதன நிதி மானியங்கள் ரூபா 604,100,000 தொகையாக இருந்ததுடன், மீண்டுவரும் நிதி மானியங்கள் ரூபா 703,275,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதன மானியங்கள் ரூபா 624,675,000 தொகையும் மீண்டுவரும் மானியங்கள் ரூபா 682,700,000 தொகையுமாக இருந்ததுடன், ரூபா 20,575,000 தொகையான செலவின மானியங்கள் மூலதன மானியங்களாக கணக்கீடு செய்யப்பட்டமை இவ்வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த ரூபா 45,644 கிரயத்திலான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் மற்றும் ரூபா 1,708,108 கிரயத்திலான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதியைக் காண்பிப்பதற்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு முறையாக பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படாத மாகந்துர வளாகத்தின் இரண்டு மாணவர் விடுதிக் கட்டிடங்களுக்காக பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,341,038 தொகை கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(உ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 2,638,573 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு அளவினை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மூலதனச் சொத்துக்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான நிதிஏற்பாடுகளாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 37,500,000 ஆன மூலதன நன்கொடைகளில் ரூபா 2,774,000 தொகை மீண்டுவரும் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அதனை மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) பல்கலைக்கழகத்தின் பெயரில் இரண்டு அரச வங்கிகளில் காணப்பட்ட ரூபா 306,500 தொகையான வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 ஆம் ஆண்டின் போது களஞ்சியத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 31,250 தொகையான இருப்பு பற்றாக்குறை மற்றும் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட எனினும் ஆரம்பிக்கப்படாத வியாபார நிர்வாகம் தொடர்பான சான்றுப்பத்திர பாடநெறிக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 144,448 தொகை உட்பட மொத்தம் ரூபா 175,698 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் நிதிக்குழு தீர்மானத்தின் பிரகாரம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை பாடநெறி மற்றும் வெளிவாரி பயிற்சி பாடநெறிக்காக பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டிருந்த முறையே ரூபா 38,114 தொகை மற்றும் ரூபா 61,215 தொகையாக மொத்தம் ரூபா 99,329 உரிய பாடநெறிகளின் செலவினமாக கணக்கீடு செய்யாமல் பல்கலைக்கழகத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

ரூபா 1,111,768,027 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களுக்கான காணி உறுதி, கையளித்தல் கட்டளை, நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டோலைகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 முதல் 19 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் பதவியணியினர் கடன் ரூபா 8,990 தொகை, ரூபா 116,356 தொகையான இடர்கடன் மீதி, நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 470,597 தொகையான முற்பணம் மற்றும் ரூபா 2,486,208 தொகையான நிர்மாாணங்களுக்கான முற்பணம் என்பவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓராண்டு காலத்திற்கு மேலாக இருந்து வரும் ரூபா 482,503 தொகையான செலுத்த வேண்டிய தொகையை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓராண்டு காலத்திற்கு மேலாக இருந்து வரும் 06 ஏனைய பொறுப்பு விடயங்களுக்குரிய ரூபா 719,550 கூட்டுத்தொகை மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதியிலான ரூபா 1,751,587 தொகை என்பன மீளாய்வாண்டின் இறுதியில் கணக்கு கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2006, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் ரூபா 307,045 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX 4.1 பிரகாரம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 12/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | I. சுற்றறிக்கை ஏற்பாடுகளிலிருந்து விலகி உத்தியோகபூர்வ விடுதி வழங்குவதற்காக பதிவாளருக்கும் நூலகருக்கும் நிர்வாக சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 10,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 220,000 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான படியொன்றை அரச உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>II மேலும் பல்கலைக்கழகத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் விடுதியில் குடியிருந்த காரணத்தினால் பதிவாளரிடமிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 7,950 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பதிவாளர் ஏதேனும் பணத்தைக் கொடுத்து பல்கலைக்கழக வளவில் தங்கியிருந்தாரா என்ற சந்தேகத்தை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 271 (2) (அ) (ஆ) | 2001 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 வரை செலுத்தப்படாத ரூபா 111,113 தொகையான சம்பளம் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | ரூபா 200,649 பெறுமதியான வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத திகதி முதல் 06 மாத காலத்தை விஞ்சிய 16 காசோலைகள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறையைப் பின்பற்றாமல் வயம்ப பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய 157 உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி மானியமாக மீளாய்வாண்டின் போது ரூபா 24,238,719 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இப்படிகள் அரசின் ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தக்கூடிய வகையில் வேலைத்திட்டமொன்றை இச்சுற்றறிக்கை மூலம் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த முன்மொழிவு முறைமையின் நிபந்தனைகளைக் கருத்திற் கொள்ளாமல் இலகுவான அடிப்படையொன்றில் பல்கலைக்கழக பதவியணியினருக்கு இக்கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளிலான நிதி விளைவுகள் ரூபா 101,915,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 135,853,000 பற்றாக்குறையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 33,938,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) நிதிச் செயலாற்றல்

நிதிச் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் உழைக்கப்பட்ட வருமானம் 71 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட முதலீட்டு வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்த போது ரூபா 1,472,000 இனால் அதிகரித்திருந்ததுடன் அது 4,329 சதவீதமாக இருந்தது. எனினும் முதலீடுகளின் பெறுமதியை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 73 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மிகையான மீதிகளை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தி வட்டி வருமானமொன்றை உழைக்கும் நடைமுறையொன்று ஆண்டின் போது பின்பற்றப்பட்டிருந்தமை இந் நிலமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது பல்கலைக்கழகத்தின் மொத்தச் செலவினம் 18 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சம்பளம் மற்றும் வேதனம், பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகள், வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள், ஒப்பந்தச் சேவைகள், ஏனைய மீண்டெழும் செலவினம், மாணவர் உதவுதொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் போன்ற செலவின விடயங்களில் ரூபா 117,427,271 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் சதவீதம் 5 முதல் 109 வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. இச் செலவின அதிகரிப்பில் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த பிரயாணச் செலவினம் கருத்திற் கொள்ளக் கூடியளவு அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

**(ஆ) நிதி நிலைமை**

நிதிநிலைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறையல்லாச் சொத்துக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தமைக்கு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி 20 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் நடைமுறை வேலைகளின் பெறுமதி 108 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ii) நடைமுறையல்லாத பொறுப்புக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது ரூபா 39,000 தொகையான செலவிடப்படாத மூலதன நன்கொடைகள் மீளாய்வாண்டின் போது ரூபா 12,754,000 வரை அதிகரித்திருந்தது. இது சிறந்த நடைமுறையொன்றல்ல என அவதானிக்கப்பட்டது.

(iii) திரண்ட நிதியம் தொடர்ச்சியாக குறைந்து கொண்டு செல்லும் நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் ரூபா 101 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அதன் சதவீதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 11 சதவீதமாக இருந்தது.

**3.3 பல்கலைக்கழகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டவிடயங்கள்**

பல்கலைக்கழகத்துடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 27,000,952 ஒப்பந்தப் பெறுமதியின் அடிப்படையில் குளியாப்பிட்டிய வளாகத்தில் தனிநபர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, ஒப்பந்தத்தை இடைநடுவில் நிறுத்திய தனியார் ஒப்பந்தக்காரரால், அவரின் பிணை முறிகளின் பெறுமதியான ரூபா 6,000,000 இனை அறவிடுவதை இடைநிறுத்தும் படி பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதன் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் 2012 ஆகஸ்ட் மாதம் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தம் 2015 யூலை வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஒவ்வொரு பீடங்களுக்காக ஏற்பட்டிருந்த செலவினம், மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்குரிய கிரயம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | பீடம் | விபரம் | | முன்னைய ஆண்டு | மீளாய்வாண்டு | அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2013 | 2014 | |
| | | | | | ரூபா | |
| (i) | வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடம் | செலவினம் | ரூபா | 73,543,884 | 91,453,057 | 24 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 1,312 | 1,521 | 15 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 56,055 | 60,126 | 07 |
| (ii) | பிரயோக விஞ்ஞான பீடம் | செலவினம் | ரூபா | 74,208,889 | 95,292,894 | 28 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 428 | 461 | 07 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 173,385 | 206,709 | 19 |
| (iii) | விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | செலவினம் | ரூபா | 84,163,292 | 100,091,898 | 18 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 439 | 454 | 03 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 191,716 | 220,446 | 15 |
| (iv) | கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடம் | செலவினம் | ரூபா | 82,539,376 | 106,824,982 | 29 |
| | | மாணவர் எண்ணிக்கை | ரூபா | 393 | 420 | 06 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | ரூபா | 210,024 | 254,345 | 21 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடத்திலும் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்திலும் ஒரு மாணவருக்கான கிரயம் ஏனைய பீடங்களுக்கு ஒப்பாக கூடிய பெறுமதியைக் கொண்டிருந்ததுடன், அது வியாபார கல்வி மற்றும் நிதியியல் பீடத்தின் ஒரு மாணவருக்கான கிரயத்திற்கு ஒப்பாக முறையே 423 சதவீதம் மற்றும் 366 சதவீதத்தினை கொண்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ஒரு மாணவருக்கான கிரயம் வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தில் 7 சதவீதத்தாலும், பிரயோக விஞ்ஞான பீடத்தில் 19 சதவீதத்தாலும், விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தில் 15 சதவீதத்தாலும் கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணை விஞ்ஞான பீடத்தில் 21 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டன.

(இ) பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் கருத்திற்கொள்ளக் கூடியளவில் எண்ணிக்கையொன்று வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகியிருந்தனர். கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 155 பேர் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாற்றலாகிச் சென்றிருந்ததுடன், அது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 15 சதவீமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் மாற்றலாகிச் சென்ற 155 மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்தினுள் ஒதுக்கப்பட்டு காணப்பட்ட வளங்கள் விளைவற்றிருந்தா எனும் சந்தேகத்தினை புறக்கணிக்க முடியாதுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெற்று அச்சந்தர்ப்பம் கிடைக்காமல் போன மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இவ்வளங்கள் வீணாவதை தவிர்ப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று முன்மொழிவு செய்தல் மீளாய்வாண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தின் மாணவர் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பதவியணி எண்ணிக்கைக்கு இடையே காணப்பட வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 18:1 ஆக இருந்த போதிலும், அதன் உள்ளவாறான விகிதம் 44:1 ஆக இருந்தது. அது மிகவும் பாதகமான காரணியொன்றாக அவதானிக்கப்பட்டது. ஏனைய மூன்று பீடங்களினது ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 10:1 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான விகிதம் 12:1 ஆக இருந்த காரணத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விகித்ததை விட உள்ளவாறான விகிதம் சிறு அளவினால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மூன்று விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்றபோது பல்கலைக்கழகத்துடன் இணங்கப்பட்ட உடன்படிக்கை 2001, 2003 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறித்தமையின் காரணமாக அவர்களிடமிருந்து மேலும் பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 3,826,651 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான இலகு கொள்கையொன்றை பின்பற்றுவதனால் எதிர்காலத்தில் அரசின் வளங்களை பயன்படுத்தி வெளிநாடு செல்லும் விரிவுரையாளர்களும் இதனை முன்மாதிரியாக கொள்வதற்கு இடவசதிகள் காணக்கூடிய சந்தேகத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ஆ) மாகந்துரை வளாகத்தில் அமைந்துள்ள நூலகத்திற்காக 2008 ஆம் ஆண்டின் போது கண்காட்சியொன்றிலிருந்து ரூபா 4,130,710 தொகையான நூலகப் புத்தகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அங்கு கொள்வனவு நடைமுறையின் அநேகமான விடயங்கள் கருத்திற்கொள்ளாமல் இருந்தமை, நூலகப்புத்தகங்களின் தேவைப்பாடு, விலை விபரம் தொடர்பாகவும் பதிப்பு ஆண்டு தொடர்பிலும் கருத்திற்கொள்ளப்படாதிருந்தமை எமது முன்னைய கணக்காய்வு விசாரணை மற்றும் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் இக்கொள்வனவு தொடர்பாக பரிசோதிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் முறையான நடவடிக்கையொன்று எடுக்காமல் ரூபா 4,053,786 பெறுமதியொன்று மீளாய்வாண்டில் உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது புத்தகங்கள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த கியத்தில் கருத்திற் கொள்ளக் கூடியளவிலான பெறுமதி விளைவற்ற

செலவினமொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அக்கொள்வனவு தொடர்பாக இடம்பெற்றுள்ள புறக்கணிப்புக்களுக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பான முறையாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் UGC/HR/ 09/01/75 ஆம் இலக்கமுடைய 2008 செப்தெம்பர் 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தொழிலாளர் தரங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் வரை ஆரோக்கிய நலன் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வெளியக உழைப்பு வழங்கும் நிறுவனமொன்றிடமிருந்து சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,664,770 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கம்பனியுடனான உடன்படிக்கை 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதியுடன் முடிவடைந்திருந்த போதிலும், மீண்டும் போட்டிக் கொள்வனவு நடைமுறையொன்றுக்குச் செல்லாமல் குறித்த நிறுவனத்தின் சேவைக்காலம் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விடுதி வசதிகள் தேவையான மாணவர்கள் தொடர்பாக முறையான ஆய்வொன்றில்லாமல் 89 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2,700,000 செலுத்தி கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் ஒரு மாணவருக்காக வருடாந்தம் செலவிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 30,337 ஆக இருந்தது. இக்கட்டிடத்தினுள் 150 மாணவர்களுக்கு விடுதிவசதிகளை வழங்கக்கூடிய கட்டிடமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது மாகந்துர கால்நடை அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் கால்நடை தொட்டிகள் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிலைமை கணக்கு பிரிவிற்கு அறிக்கையிடாத காரணத்தினால் ரூபா 2,469,713 தொகையான கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் பதவியணியினரின் அபிவிருத்திக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த ரூபா 10,500,000 தொகையில் 13 சதவீதம் அதாவது ரூபா 1,348,618 தொகை குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பராமரிப்பு பிரிவின் மூலம் சில நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடப் பொருட்கள் ரூபா 1,647,590 தொகை மாகந்துர பராமரிப்பு பிரிவின் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவருக்கு கலாநிதி பட்டப்பின் படிப்பின் பின்னர் மேற்கொள்ளும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த பவுன் 5,000 (ரூபா 980,200) தொகையை அவரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக காணப்பட்ட எதிர்ப்பினை கருத்திற் கொள்ளாமல் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் 2014 சனவரி 21 ஆந்

திகதிய C/141/48SUPP ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தினால் பணத்தை செலவு வைத்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது. இவ்விரிவுரையாளருக்கு உரிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக இலங்கை வயம்ப பல்கலைகத்தின் விரிவுரையாளர் என்ற வகையில் பணம் கிடைக்கப்பெற்றுள்ளதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

(ஆ) மாகந்துர வளாகத்தில் இரண்டு மாணவர் விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மதிப்பீட்டை தயாரித்தல், உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் பணக் கொடுப்பனவு என்பன உயர்கல்வி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாணம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நிலத்தை தயார்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,640,510 தொகை பல்கலைக்கழகத்தினால் செலவிடப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர் மற்றும் பல்கலைக்கழகத்திற்கிடையே எதுவித உடன்படிக்கையொன்று இல்லாமல் இச்செயற்திட்டத்திற்காக பல்கலைக்கழக கட்டிட நிர்மாணத்திற்காக பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 5,341,038 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் விடுதியை வாடகைக்கு எடுக்கும் போது மதிப்பிட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 246,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மாகந்துர வளாகத்தின் இரண்டு விரிவுரையாளர்கள் மீளாய்வாண்டில் ஒரே தினத்தில் கொழும்பிற்குச் செல்வதற்காக ரூபா 5,850 மற்றும் ரூபா 5,148 தொகை எனும்படியாக ரூபா 10,998 செலுத்தி இரண்டு வாடகை வாகனங்களைப் பெற்றுக் கொண்டிருந்தமை சிக்கனமற்ற நடவடிக்கையொன்றாக அவதானிக்கப்பட்டது.

(இ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்ததன் பின்னர் வாடகை வாகனங்கள் அகற்றப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தால் 2013 ஆம் ஆண்டில் 05 புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் வாடகை வாகனங்களுக்காக ரூபா 2,724,456 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 50 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

## 4.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கை காலத்தினுள் வேலையைப் பூர்த்தி செய்யாமை காரணமாக கொடுப்பனவு செய்யும் போது மேலதிக செலவினப் பொறுப்பொன்று மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) குளியாப்பிட்டிய வளாகத்தில் வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீட கட்டிடத்தின் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை காலம் 2011 சனவரி 27 ஆந் திகதியில் முடிவடைந்த போதிலும், நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் 2013 நவம்பர் 28 ஆந் திகதியே கையளிக்கப்பட்டிருந்தது. அத்திகதியின் பின்னர் 2015 சனவரி மாதம்

வரையில் எந்தவொரு பட்டியலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாண தாமதம் விலை முரண்களை கணக்கிடுவதற்கு உட்படுவதுடன், விலை முரண்களுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா 10,363,120 ஆக இருந்தது, இதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காரணங்களை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள சிக்கலாக உள்ளது.

(ii) மாகந்துர வளவில் தனிநபர் விடுதி கட்டிடத்தின் நிர்மாணம் 2012 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும், அது 2013 ஆம் ஆண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது எதுவித பட்டியலொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 07 ஆவது பட்டியலுக்காக ரூபா 2,424,959 தொகை விலை விலகலுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரின் பலவீனமான நிர்மாணத்தின் அடிப்படையிலேயே நிர்மாணத்தில் காலதாமதம் ஏற்பட்டதாக 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கையில் விலை முரண் கொடுப்பனவை அங்கீகரித்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(ஆ) ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நடைமுறை வேலையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 34,085,902 கூட்டுப் பெறுமதி தொடர்ந்தும் மாற்றமுராது காணப்பட்டது. அதில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான மீதிகளும் காணப்பட்டன.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினர் 275 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கை 255 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது சில கற்கைப் பிரிவுகளில் சில விடயங்களுக்காக விஷேட திறன்களையுடைய விரிவுரையாளர்கள் இன்மையின் காரணமாக 69 வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சம்பளமாக ரூபா 8,508,195 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையின் படி 26 சிற்றூழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது நாளாந்த நடவடிக்கைகளைச் செய்வதற்காக அவ்வளவாக இடையூறாக இல்லாதிருந்த போதிலும், பல்வேறு காரணங்கள் காண்பிக்கப்பட்டு வெளிவாரி ஊழியர் சேவைகளை வழங்கும் நிறுவனத்திலிருந்து 12 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்களின் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,644,770 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனமொன்றின் திட்டமிடப்பட்ட

வியாபார காலப்பகுதியில் (ஓராண்டிற்கு) நோக்கம் மற்றும் இலக்கினை பூர்த்தி செய்வதற்காக தெளிவாக அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்தல் முகாமையின் பொறுப்பாக இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக முறையான தயாரிக்கப்பட்ட செயல்நடடிக்கைத் திட்டமொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்படி அமையாத செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கட்டிட புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் என்பவற்றின் கீழ் ரூபா 12,500,000 நிதிஏற்பாடு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் முடிவுக் கணக்கில் மேற்படி நிதிஏற்பாடு ரூபா 37,500,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 10 வேலை விடயங்களுக்காக ரூபா 12,500,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்காத வகையில் 51 வேலை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 39,577,470 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 455,000,000 பெறுமதியான செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயன்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. வியாபாரக் கல்வி பீடக் கட்டிடம் மற்றும் கல்விசார் விவாகமாகாத பதவியணி கட்டிடம் போன்ற செயற்திட்டங்களுக்காக முன்னைய ஆண்டில் சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,398,871 தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. மாகந்துர சுகாதார நிலையத்திலிருந்து 49 சதவீதமும், குளியாப்பிட்டிய சேவை நிலையத்திலிருந்து 96 சதவீதமும், விளையாட்டு மைதானத்தை அமைப்பதன் மூலம் 20 சதவீதமும் விளையாட்டுத் துறையின் நிபுணத்துவத்திற்காக 93 சதவீதமுமாக மொத்தம் ரூபா 14,515,623 சேமிக்கப்பட்டிருந்தன. 08 செலவின விடயங்களுக்காக மொத்த ஏற்பாட்டை விஞ்சி ரூபா 23,120,397 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டை தயாரிக்கும் போது 40 செலவின விடயங்களுக்கு மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை, 20 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை, 02 செலவின விடயங்களில் மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகையும் செலவிடப்பட்டிருக்காமை மற்றும் 03 செலவின விடயங்களில் ஏற்பாடு இல்லாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் பல்கலைக்கழகத்தால் வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு 2010 - 2011 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையில் ஒரு செயற்திட்ட முன்மொழிவொன்றை சமர்ப்பித்த விரிவுரையாளருக்கு அச்செயற்திட்டத்திற்காக ரூபா 99,882 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்திற்குரிய ஆராய்ச்சி அறிக்கை 2013 பெப்ரவரி இறுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் கொள்வனவு
(இ) நிர்மாண ஒப்பந்தம்
(ஈ) முற்பணம் வழங்குதல்
(உ) வெளிவாரிப் பாடநெறிகளை நடாத்துதல்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) பதவியணியினர் நிர்வாகம்
(ஏ) கொள்வனவு நடைமுறைகள்
(ஐ) வாகனக் கட்டுப்பாடு
(ஒ) வெளிவாரி விரிவுரை தொடர்பான கட்டுப்பாடு